சுருக்கம்

பள்ளிகள் — மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரகம் - இயக்ககம் மற்றும் கள அளவில் கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்தி பலப்படுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித்(யு2) துறை

அரசாணை (நிலை) எண்: 4

நாள்: 10.1.2002.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண் 188 பள்ளிக் கல்வி நாள் 8.11.2001
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.121039/சி10/2001 நாள் 4.1.2002.
3. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண் 2409/அ1/99 நாள் 2.1.2002 மற்றும் 7.1.2002.
4. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் கடித ந.க.எண். 650/இ2/இ4/2001 நாள் 29.12.2001.

ஆணை:

அரசாணை (நிலை) எண் 188 பள்ளிக் கல்வி நாள் 8.11.2001ல் அமைக்கப்பட்ட மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரகத்தை இயக்கக அளவிலும், கள அளவிலும் பலப்படுத்தும் பொருட்டு பள்ளிக் கல்வி இயக்குநரகத்திலிருந்தும், முறைசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்திலிருந்தும் Redepoyment முறையில் கீழ்க்காணும் பணியிடங்களை பணியாளர்களுடன் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரகத்திற்கு மாற்ற இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

I. பள்ளிக் கல்வி இயக்ககத்திலிருந்து மாற்றப்படும் பணியிடங்கள் விவரம்:-

1. உதவி இயக்குநர்கள் : இரண்டு
2. நிலை உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் : நான்கு
3. தட்டச்சர் : ஒன்று

இதனால் ஏற்கனவே உள்ள நான்கு உதவியாளர்கள் பணியிடங்களுடன் தற்போது மாற்றப்படும் நான்கு உதவியாளர்களையும் சேர்த்து மொத்தம் 8

பணியிடங்களையும் தற்போது மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்கத்தில் உள்ள இரு கண்காணிப்பாளர்களிடையே 1 : 4 என சமபங்கீடு செய்து கொள்ளலாம்.

II. <u>முறைசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கத்திலிருந்து மாற்றப்படும் பணியிடங்களின் விவரம்:-</u>

(i) முறைசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கத்தின் கீழ் மாவட்ட அளவில் உள்ள 22 மாவட்ட முதியோர் கல்வி அலுவலர் பணியிடங்களில் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, சிவகங்கை, திண்டுக்கல், நீலகிரி ஆகிய 7 மாவட்டங்களில் உள்ள மாவட்ட முதியோர் கல்வி அலுவலர் பணியிடங்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுடன் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரகத்துக்கு கீழ்க்குறிப்பிட்டவாறு கள அளவில் மாற்றபடும்.

1. மாவட்ட முதியோர் கல்வி அலுவலர் பணியிடங்கள் : 7
2. உதவியாளர்கள் : 7
3. சுருக்கெழுத்து தட்டச்சர் : 7
4. அலுவலக உதவியாளர் : 7
5. ஓட்டுநர் : 7

மாவட்ட முதியோர் கல்வி அலுவலர் பணியிடங்கள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரகத்துக்கு மாற்றப்பட்டபின், அவைகள் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர்கள் என பெயர் மாற்றம் பெறும். அவ்வாய்வாளர் பணியிடங்கள் ஒவ்வொன்றிற்கும் மேற்குறிப்பிட்ட அமைச்சுப் பணியாளர்கள் சமபங்கீடாக (அதாவது உதவியாளர் - ஒருவர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஒருவர், அலுவலக உதவியாளர் ஒருவர், ஓட்டுநர் ஒருவர் என) பகிர்ந்தளிக்கப்படும். இப்பணியிடங்களில் ஓட்டுநர் பணியிடம் ஏதேனும் காலியிருப்பின் அதனை ஒப்பந்த அடிப்படையில் தேவைப்படின் நிரப்பிக் கொள்ளலாம்.

(ii) ஏழு மாவட்ட முதியோர் கல்வி அலுவலர் பணியிடங்கள் மாற்றப்படுவதால் அவர்கள் பயன்படுத்தி வந்த உந்து வண்டிகளும், அப்பணியிடங்களுடன் கீழ்க்குறிப்பிட்டவாறு மாற்றப்படும்

| | | |
|---|---|---|
| 1 TDJ | மகேந்தரா & மகேந்திரா ஜீப் 6279 | திருவண்ணாமலையில் உள்ளது |
| 2 TDT | ஜீப் - யுனிவர்சல் 7714 | தூத்துக்குடியில் உள்ளது |
| 3 TDS DTT | மகேந்தரா & மகேந்திரா ஜீப் 8783 | திண்டுக்கல்லில் உள்ளது |
| 4 | மகேந்தரா ஜீப் யுனிவர்சல் | சிவகங்கையில் உள்ளது |
| 5 | டிரக்கர் ஜீப் | நாகர்கோயிலில் உள்ளது. |
| 6 | மகேந்தரா & மகேந்திரா யுனிவர்சல் ஜீப் | நீலகிரியில் உள்ளது. |